ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,490 — 1965 අගෝස්තු 27 වැනි සිකුරාදා — 1965.8.27

14,490 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 277 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 279 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 280 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 283 | நானாவித அறிவித்தல்கள் .. .. | — |


## பதவிகள்—வெற்றிடம்

### "இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

1. **படிகள்.**—வேறுவிதமாய்ச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. **சேவைக்குரிய நிபந்தனைகள்.**—அரசாங்க சேவைக்கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்குவிதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலநதோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. **நியமன விதிகள்.**—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குப்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள்வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை அரசாங்கம் ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாது அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவாகளென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. **புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.**—(i) "சந்தர்ப்பத்துக்குத் தக்கதாக இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்பட்ட/இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கு நியமிக்கப்படும்" புதிய உத்தியோகத்தர்களுக்குரிய தகுதிகாண்காலம்/பரீட்சாகாலம் ஏதும் பதவிகளுக்குரிய அக்காலம் 3 ஆண்டுகளுக்கு மேலாகவிருக்கவேண்டும் என்று விதிக்கப்பட்டால் ஒழிய 3 ஆண்டுகளாகும்.

(ii) "புதிய உத்தியோகத்தர்" ஏற்கனவே இயற்றப்பட்டுள்ள பிரமாணங்களுக்கு அல்லது அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை அமுல் நடத்துவதற்கு, அதிலும் விசேடமாக, 1956 ஆம் ஆண்டின் 33 ம் இல. அரசாங்க மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறையிற் கொண்டுவருதற்கு இனிச் செய்யப்படக்கூடிய பிரமாணங்களுக்கு இயைய நடத்தல் வேண்டும்.

(iii) (அ) இவ்வுத்தியோகத்தர்கள் தங்களுடைய தகுதிகாண் நிலைக் காலத்தில்/பரீட்சாகாலத்தில் சிங்களமொழியறிவைப் பெறவேண்டும்.

(ஆ) தகுதிகாண்கால/பரீட்சைகால முடிவில் அவர்களின் நியமன ஊர்ஜிதம், வேறு விடயங்களுடன் சிங்கள மொழியில் ஓர் தேர்வுப்பரீட்சையில் சித்தியெய்துவதைப் பொறுத்திருக்கும்.

## முக்கிய விளம்பரம்

*1965 ம் ஆண்டு புரட்டாதி (செத்தெம்பர்) மாதம் 10 ந் திகதி வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால் 1965 ம் ஆண்டு புரட்டாதி (செத்தெம்பர்) மாதம் 9 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1965 ம் ஆண்டு புரட்டாதி (செத்தெம்பர்) மாதம் 4 ந் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

பேர்னுட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1965 ம் ஒுு ஆவணி (ஓகத்து) மீ 20 ந் உ.

தகுதிகாண் நிலைக்காலத்தில்/பரீட்சாகாலத்தில் சிங்கள மொழியறிவுப் பரீட்சையில் விதிக்கப்பட்ட தரத்தை எய்தத் தவறுபவர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட ஆளாவர்; ஆனால் குறித்தவோர் உத்தியோகத்தர் அரசாங்க மொழியில் அறிவைப் பெறுவதற்கு மனப்பூர்வமாக முயற்சித்திருக்கிறார் என்று நியமனம் செய்யும் அதிகாரி கருதுவாரானால் குறித்த பதவி நீக்கம் பின்போடப்படலாம். உரிய திகதிக்குப்பின் நியாயமான அளவு காலத்துக்குள் குறித்த உத்தியோகத்தர் குறித்த பரீட்சையிற் சித்தி எய்துவாரானால், சிரேட்டத்துவம் இழப்பதும் இல்லாமற் போகலாம்.

(iv) சிங்கள மொழிமூலம் அரசாங்க உத்தியோகத்திற் சேர விரும்பும் உத்தியோகத்தர்கள் சிங்கள மொழியறிவுப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்ற விதியிலிருந்து விலக்களிக்கப்படுவர்.

குறிப்பு.—" புது உத்தியோகத்தர் " என்பது இங்கே, 1956 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதிக்குப் பின் அரசாங்க சேவைப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டவர்களாய் 1957 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதியைக் கொண்ட 379 ஆம் இல. திறைசேரிச் சுற்றுநிருபத்தின் உபபந்திகள் 2 (ii) (B), 2 (ii) (C) என்பனவற்றுக்கிணங்கப் பழைய உத்தியோகத்தர்களாயில்லாதவர்களைக் கருதும்.

5. வேண்டியதகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். " இலங்கையர் " என்பவர் வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும்படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப் பாதுகாப்புப்படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேரக் கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு, அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்குமுன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற விதிகள்.—(i) அரசாங்க சேவையிலுள்ள தகைமையுள்ள உத்தியோகத்தரது விண்ணப்பங்கள் அன்னவரின் திணைக்களத்தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அத்தகைய உத்தியோகத்தர் விண்ணப்பத்தின் பிரதி ஒன்றை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக, முடிவுத் திகதியன்றோ அதன் முன்னரோ அதனைப் பெறக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களது விண்ணப்பங்களை திணைக்களத் தலைவர்கள் அனுப்பும்போது குறித்த விண்ணப்பதாரர்கள் (தெரிவு செய்யப்பட்டால்) விடுவிக்கப்படுவார்களா அன்றா என்பதை கருமமுறைக் கைநூலின் 109 ஆம் பரிபாலன ஒழுங்கின் பிரகாரம் குறிப்பிடல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச்செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப்பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்துச் சிபாரிசு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவுதேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாகிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால், தெரிவுசெய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

## கொழும்பு அரசாங்க ஹோட்டல் பாடசாலையில் 1965 ஒக்டோபர் மாதத்தில் ஆரம்பமாகும் பயிற்சி வகுப்பு

கொழும்பில் உள்ள அரசாங்க ஹோட்டல் பாடசாலையில் ஹோட்டல் சேவை சம்பந்தமான பின்வரும் பாடங்களில் ஒரு வருடப் பயிற்சி பெறுவதற்கு உள்ள 40 வெற்றிடங்களுக்குத் தகுந்த தராதரம் பெற்ற நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :—

1. உணவுச் சுகாதாரம்.
2. படுக்கையறை வேலை.
3. சாப்பாட்டறை வேலை.
4. சமயலறை வேலையும் சமையலும்.

2. விண்ணப்பதாரர்கள் 1965 செப்ரெம்பர் 17 ஆம் திகதி 18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும் என்பதுடன், க.பொ.த.ப. (சாதாரண தரம்) பரீட்சையில் குறைந்தது ஆறு பாடங்களில் சித்திபெற்றோ அல்லது சிரேஷ்ட தராதரப் பத்திரம் பெற்றோ இருத்தல் வேண்டும். வெளிநாட்டவர்களைப் பயிற்சியாளர் கவனிக்க வேண்டி வருமாதலால், ஆங்கில மொழி அறிவோ அல்லது வேறு ஏதாவதொரு வெளிநாட்டு மொழி அறிவோ பெற்றிருத்தல் கூடுதலான ஒரு தகைமையாகக் கணிக்கப்படும்.

3. ஒரு குழு நடத்தும் நேர்முகப் பரீட்சை மூலமே தேர்வு செய்யப்படும்.

4. மாணவர்களுக்கு இலவச போதனையும் சாதனரீதியான பயிற்சியும் அளிக்கப்படும். பாடசாலையில் தங்கியிருக்க வேண்டிய மாணவன் மாதம் ஒன்றுக்கு விடுதிக்கும் சாப்பாட்டுக்குமாக 50/- ரூபா கட்டணமாகச் செலுத்த வேண்டும். இப்பயிற்சிக்கு ஆண்மாணவர்களே அனுமதிக்கப்படுவர்.

5. சேவைமூலமே மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். இதற்கு எவ்வித வேதனமும் கொடுக்கப்படமாட்டாது. அங்கீகரிக்கப்பட்ட மாதிரியிலும் புடவையிலும் குறைந்தது மூன்று சோடி ஒருசீரான உடுப்புக்களை வைத்திருத்தல் வேண்டும். பாடசாலையின் விதிகள், கட்டுப்பாடுகள் அனைத்தையும் எல்லா மாணவர்களும் அனுசரித்து நடக்கவேண்டும். கீழே கையெழுத்திட்டுள்ளவரிடமிருந்து பாடசாலை விவர மஞ்சரியில் ஒரு பிரதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

6. விண்ணப்பங்கள் கீழே தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கு அமைவதாக இருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டிய விலாசம் : நிரந்தரக் காரியதரிசி, அரசாங்க அமைச்சு, 19 லோங்டன் பிளேஸ், கொழும்பு 7. 1965, செப்ரெம்பர் 17 ஆம் திகதிக்குப்பின்னர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

டி. அலுவிகாரை,
நிரந்தரக் காரியதரிசிக்காக.

அரசாங்க அமைச்சு,
19, லோங்டன் பிளேஸ்,
கொழும்பு 7
1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 13 ந உ.

### மாதிரி விண்ணப்பப்பத்திரம்

கொழும்பிலுள்ள அரசாங்க ஹோட்டல் பாடசாலையில் 1965 ஒக்டோபர் மாதத்தில் ஆரம்பமாகும் பயிற்சி வகுப்பில் சேருதற்கான விண்ணப்பம்

1. முழுப்பெயர் : ————.
2. தபால் விலாசம் : ————.
3. 1965 செப்ரெம்பர் 17 ஆம் திகதியன்று சரியான வயது :
————வருடங்கள், ————மாதங்கள், ————நாட்கள்.
(பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இணைக்கப்பட வேண்டும்)
4. கல்வித் தகைமைகள் : ————.
(தராதரப் பத்திரங்களின் பிரதிகள் மட்டுமே இணைக்கப்பட வேண்டும்)
5. இலங்கைப் பிரஜையா ?
வம்சாவழிப் பிரஜையா அல்லது : ————.
பதிவுப் பிரஜையா ?
(பதிவுப் பிரஜையானால் பதிவுப் பத்திரத்தின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக)

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.

8-991—27.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,490

## வித்தியா பகுதி

### வர்த்தக ஆசிரியர்களைச் சேர்த்தல்

சிங்களம், தமிழ் ஆகிய மொழிகள் மூலம் கல்வி ஊட்டப்படும் பாடசாலைகளில் வர்த்தக ஆசிரியர்கள் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழே தரப்பட்டுள்ள மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்பட்டு "வித்தியாதிபதி, கல்வி ஆராய்ச்சிக் (வர்த்தக) கிளை, வித்தியா பகுதி, மலாய் வீதி, கொழும்பு 2" என்ற விலாசத்துக்கு 1965 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விண்ணப்பம்—வர்த்தக ஆசிரியர்" எனக் குறிப்பிடப்பட வேண்டும். சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் 25 காலியிடங்களும் தமிழ் மொழி மூலப்பாடசாலைகளில் 5 காலியிடங்களும் உண்டு.

2. **சம்பளமும் சகாப் பணங்களும் :**—இப்பதவிக்கான சம்பள விகிதம் பின்வருமாறு :

ரூ. 1,560—14 × 72—2,568 (திறமைகாண் தடை)
2,640—5 × 120—3,240.

சீவன சகாயப் பணமும் விசேட சீவன சகாயப் பணமும் விதிக்கப்பட்ட விதிதங்களுக்கு அமைய வழங்கப்படும்.

3. **நியமன நியதிகள் :**—(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் பாடசாலை ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பள விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையனவையும் ஆகும். (ii) நியமிக்கப்படுபவரின் நியமனம் 3 வருட காலத்துக்கு தகுதிகாண் முறையில் அமையும்.

(iii) தெரிவு செய்யப்படுபவர் தீவின் எப்பகுதியிலும் கடமை புரியும்படி கேட்கப்படலாம்.

4. **வயதெல்லை :**—விண்ணப்பங்கள் ஏற்கப்படும் கடைசித் திகதியன்று விண்ணப்பதாரர்கள் 20 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். அரசினர் பாடசாலைகளிலுள்ள நிரந்தர ஆசிரியர்களுக்கும் அரசினர் சேவையிலுள்ள நிரந்தர உத்தியோகத்தர்களுக்கும் இவ்வயதெல்லைக்கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது.

5. **தேவைப்படும் தகைமைகள் :**—ஒவ்வொரு விண்ணப்பகாரரும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்துள்ளதாகத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும் :—

(அ) 1. இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியால் அல்லது லண்டன் வர்த்தக சம்மேளனத்தால் (London Chamber of Commerce) அளிக்கப்படும் இரு உயர்தர வர்த்தக தராதரப் பத்திரங்கள்.

அல்லது

2. இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியால் அல்லது லண்டன் வர்த்தக சம்மேளனத்தால் அளிக்கப்படும் ஒரு உயர்தர வர்த்தக தராதரப் பத்திரமும் இவற்றால் அளிக்கப்படும் சாதாரண மாற்றுத் தராதரப் பத்திரமும் பெற்றிருப்பதாக.

அல்லது

3. சிங்கள பாஷாமய வானிஜ சகதிகயவின் இரண்டு பிரிவுகள்.

(ஆ) சி.பா.த.பத்திர அல்லது க.பொ.த.பத்திர (சிங்கள அல்லது தமிழ்) பரீட்சையில் பாஷைப்பாடத்தில் சித்தியெய்தியிருப்பதாக.

(இ) நன்னடத்தை உடையவராகவும் உடல் நலன் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலப்பிரதிகளல்ல) சேர்த்தனுப்ப வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் ஒழுங்குச் சட்டத்தின் நோக்கத்துக்காகக் கொடுபடும் பத்திரம் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) சிங்களத்தில், தமிழில் பெற்றிருக்கும் தேர்ச்சிக்கு அத்தாட்சியான பத்திரம்.

(ஈ) தராதரம், நடத்தை, இப்பதவிக்குரிய தகுதி என்பவற்றைக் குறிக்கும் அண்மையில் பெற்ற மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள் (இவ்வுப பிரிவின்கீழ் தேவைப்படும் நற்சாட்சிப் பத்திரங்களை ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்கள் அனுப்ப வேண்டியதில்லை).

**குறிப்பு.**—நற்சாட்சிப் பத்திரங்கள், தராதரப் பத்திரங்கள் ஆகியவற்றின் பிரதிகள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

7. அரசினர் செய்திமடலின் I ம் பகுதி II ம் பிரிவில் பிரசுரிக்கப்படுபவையும் அரசினர் சேவையிலுள்ள பதவிகளுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகளைக் கவனிக்கவும். இப்பொது நிபந்தனைகளும் இங்கு கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் சேர்ந்து இப்பதவிகளுக்கு அமையும்.

8. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவத்தை விண்ணப்பதாரிகள் பிரதிசெய்யவேண்டும். அச்சிடப்பட்ட படிவங்கள் இக்கந்தோரில் கிடையா. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளுதல்பற்றி விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும். விண்ணப்பங்களை பதிவுத் தபால் மூலம் அனுப்புமாறு விண்ணப்பதாரிகளுக்கு ஆலோசனை கூறப்படுகிறது.

ஈ. எச். டி அல்விஸ்,
வித்தியாதிபதி.

வித்தியா பகுதி,
மலாய் வீதி, கொழும்பு 2,
1965 ம் ஆடு ஒகஸ்ற் மீ

#### மாதிரி விண்ணப்பப் படிவம்

#### வர்த்தக ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப் பெயர் : ————. திரு./திருமதி/செல்வி
(தெளிவாக எழுதவும்)
2. விலாசம் : ————.
3. விண்ணப்பதாரியின் பிறந்த இடமும் திகதியும் : ————.
(பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்)
4. பிறந்த இடம் : ————.
(1) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
(2) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.
(3) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிக்கொப்பாட்டன் : ————.
5. (அ) சாதியம் : ————.
(ஆ) இலங்கையராயின் பிரசாவுரிமைப் பதிவாலா ? அல்லது வம்சாவழியாலா ?
6. தற்போதைய உத்தியோகமும் அதன் சேவை விபரங்களும் : ————.
7. தராதரங்கள் : ————.
8. சிங்களத்தில்/தமிழில் பெற்றுள்ள அறிவு ————.
(சித்தியெய்திய ஆகக்கூடிய பரீட்சை)
9. விசேட உரிமைகள், தராதரங்கள் அல்லது அனுபவம் பற்றிய விபரங்கள் : ————.
10. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்தவர்களின் பெயர்களும் விலாசங்களும் : ————.

மேற்குறித்த பதவிக்கு நான் தெரிவு செய்யப்பட்டால் ........
..........................................................
(முழுப் பெயர்)

ஆகிய நான் தீவின் எப்பகுதியிலும் சேவை புரிதற்கு இணங்குகின்றேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

8-1048—27.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,490

---

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### புகையிரதப் பகுதி நிலைய அதிபர்கள், உதவி நிலைய அதிபர்கள் சேவைக்குச் சேர விரும்புவோருக்குரிய பரீட்சை—செப்டம்பர், 1965

18.6.65 ம் திகதி, 14,427 ம் இலக்கமுடைய அரசாங்க செய்திமடலிளுள் அறிவிப்பின் சார்பில் அறியத்தருவது என்னவென்றால், 1965 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ம் திகதி நடைபெறவிருந்த மேற்படி பரீட்சை, 1965 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25 ம் திகதிக்குப் பின் போடப்பட்டிருக்கிறது.

டி. சமரக்கோன்,
பிரதம நிருவாக அதிபர்,
இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி.

தலைமை அதிபர் அலுவலகம்,
கொழும்பு, 1965 ம் ஆடு ஜூலை மீ 23 ந உ.

8-1041—27.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,490

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கை அரச விமானப் படை

இலங்கை அரச விமானப்படையின் கட்டுநாயக்கா தளத்திலுள்ள விநியோகமும் பாதுகாத்தலும் பிரிவின் கீழ்க்காணும் மீட்கப்பட்ட (Salvage) பொருட்கள் விற்பனைக்குண்டு. அதற்கான மெழுகிட்ட கேள்விகளை கொழும்பு, சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையிலுள்ள இலங்கை அரச விமானப் படைத்தலைமை நிலையத்திலிருக்கும் விமானப்படையின் தலைவர் 1965, செப்ரெம்பர் 14 ந் திகதி முற்பகல் 10.00 மணி வரை ஏற்றுக்கொள்வார்.

| | | |
|---|---|---|
| (அ) | பழைய தோல் .. .. | சுமார் 224 றுத்தல் |
| (ஆ) | பழைய பட்டரிகள் .. | 83 ஒற்றை |
| (இ) | பழைய ரப்பர் .. .. | 7,000 றுத்தல் சுமார் |
| (ஈ) | பழைய படங்குகள் .. | 650 றுத்தல் சுமார் |
| (உ) | சாக்குகள் பெரியது .. | 300 ஒற்றை |
| (ஊ) | வெற்றுப் போத்தல்கள் .. | 300 ஒற்றை |
| (எ) | வெற்று ரின்கள், 4 கலன் .. | 165 ஒற்றை |
| (ஏ) | வெற்று ரின்கள், 1 கலன் .. | 455 ஒற்றை |

2. கேள்விகள் விமானப்படையின் தலைவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களிலேயே இருத்தல் வேண்டும். கேள்விக்கட்டப்பணமாக ரூபா 50/- யை கொழும்பு, சேர் சிற்றம்பலம் கார்டினர் வீதியிலுள்ள விமானப் படைத் தலைமை நிலையத்திலிருக்கும் சிவில் பரிபாலன உத்தியோகத்தரும் கணக்காளருமாகக் கடமையாற்றுபவரிடம் கட்டிய பின்னரே கேள்விப் படிவங்கள் கொடுக்கப்படும். கேள்விப் படிவங்கள் 1965, செப்ரெம்பர் 13 ந் திகதி நண்பகல் 12 மணி வரை கொடுக்கப்படும்.

3. கேள்விகள் இருபிரதிகளாக உறையிலிட்டு மெழுகிட்டு அவ்வுறையின் இடதுபுற மேல் மூலையில் "மீட்கப்பட்ட பொருட்கள் விற்பனைக்கான கேள்வி" எனக் குறிப்பிட்டு, விமானப்படைத்தலைவர், சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தை, கொழும்பு என முகவரியிட்டு அனுப்பப்படல் வேண்டும். பொருட்கள் ஒவ்வொன்றிற்கான கேள்விகள் தனித்தனியாக ஆராயப்பட்டு ஆகக்கூடிய கேள்விக்காரருக்கே விற்பனை செய்யப்படும்.

4. முதலாம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட திகதி, நேரம், இடத்தில் கேள்விகள் பரிசீலனை செய்யப்படும். அவ்வேளையில் கேள்விக்காரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர். கேள்விக்காரர்களில் யாராயினும் கேள்விகளில் எதையேனும் பார்வையிட விரும்பின் விமானப் படைத் தலைவருடன் அதற்கான ஒழுங்கைச் செய்து அக் கேள்வியின் பிரதியைப் பார்வையிடலாம்.

ஈ. ஆர். அமரசேகர,
எயர் கொமடோர்,
விமானப் படையின் தலைவர்.

8-1042—27.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,490

---

## கொழும்புத் துறைமுக அதிகாரசபை

### இராணி எலிசபெத் மேடைப் போசனசாலை

மேற்படி தேநீர்ச்சாலையைக் குத்தகைக்குக் கொடுக்க முத்திரையிடப்பட்ட கேள்விகள் 1965 ம் ஆண்டு செப்டம்பர் 17 ம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை துறைமுக அதிகாரியினால் ஏற்றுக்கொள்ளப்படும். இக் குத்தகை, துறைமுக அதிகாரியினால் நிச்சயிக்கப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்காகும்.

2. கொழும்புத் துறைமுக அதிகாரசபையில் ரூபா 25 கட்டுப்பணமாகக் கட்டிப் பெறப்படும் பத்திரங்கள் பூர்த்தி செய்யப்பட்டு இணைப் பத்திரத்துடன் அனுப்பப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள் 1965 ம் ஆண்டு செப்டம்பர் 15 ம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை எல்லாக் கடமை நாட்களிலும் வழங்கப்படும்.

4. குத்தகைக்கான நிபந்தனைகள் கேள்விப் பத்திரங்களுடன் சேர்த்துக் கொடுக்கப்படும்.

8-1019—27.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,490

---

## கொழும்புத் துறைமுக அதிகாரசபை

### டொக் துறைமேடை தேநீர்ச்சாலை

மேற்படி தேநீர்ச்சாலையைக் குத்தகைக்குக் கொடுக்க முத்திரையிடப்பட்ட கேள்விகள் 1965 ம் ஆண்டு செப்டம்பர் 17 ம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை துறைமுக அதிகாரியினால் ஏற்றுக்கொள்ளப்படும். இக் குத்தகை, துறைமுக அதிகாரியினால் நிச்சயிக்கப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்காகும்.

2. கொழும்புத் துறைமுக அதிகாரசபையில் ரூபா 25 கட்டுப்பணமாகக் கட்டிப் பெறப்படும் பத்திரங்கள் பூர்த்தி செய்யப்பட்டு இணைப் பத்திரத்துடன் அனுப்பப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள் 1965 ம் ஆண்டு செப்டம்பர் 15 ம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை எல்லாக் கடமை நாட்களிலும் வழங்கப்படும்.

4. குத்தகைக்கான நிபந்தனைகள் கேள்விப் பத்திரங்களுடன் சேர்த்துக் கொடுக்கப்படும்.

8-1017—27.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,490

---

## கொழும்புத் துறைமுக அதிகாரசபை

### பிரின்ஸ் விஜயா துறை மேடைப் போசனசாலை

மேற்படி தேநீர்ச்சாலையைக் குத்தகைக்குக் கொடுக்க முத்திரையிடப்பட்ட கேள்விகள் 1965 ம் ஆண்டு செப்டம்பர் 17 ம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை துறைமுக அதிகாரியினால் ஏற்றுக்கொள்ளப்படும். இக் குத்தகை, துறைமுக அதிகாரியினால் நிச்சயிக்கப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்காகும்.

2. கொழும்புத் துறைமுக அதிகாரசபையில் ரூபா 25 கட்டுப்பணமாகக் கட்டிப் பெறப்படும் பத்திரங்கள் பூர்த்தி செய்யப்பட்டு இணைப் பத்திரத்துடன் அனுப்பப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள் 1965 ம் ஆண்டு செப்டம்பர் 15 ம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை எல்லாக் கடமை நாட்களிலும் வழங்கப்படும்.

4. குத்தகைக்கான நிபந்தனைகள் கேள்விப் பத்திரங்களுடன் சேர்த்துக்கொடுக்கப்படும்.

8-1018—27.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,490

## நீர்ப்பாசனத் திணைக்களம், மாத்தளை உப பிரிவு

கீழ்க்காணும் வேலைகளுக்கு கேள்விப் பத்திரங்கள் கண்டியிலுள்ள மத்தியப் பகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1965 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 15 ம் திகதி புதன்கிழமை காலை 10 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அதன் பின்பு உடனே திறக்கப்படும்.

| வேலைகளின் விபரம் | பதிவுத் தொகை ரூபா |
|---|---|
| (1) டம்புல்லு ஆற்றில் அணைகட்டுதல் .. | 30 000 மேல் |
| (2) நபரல்லை குளத்து இடதுபக்க பிரதான வாய்க்கால் வெட்டுதல் .. .. | 25 000 மேல் |

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர். வெற்றுப் பத்திரங்கள் மாத்தளை, கண்டி, கசலக்க மினிப்பே, நுவரேலியா நீர்ப்பாசனக் கந்தோர்களில் அலுவலக நேரங்களில் 1965 ம் ஆண்டு ஆவணி மாதம் 28 ந் திகதியிலிருந்து புரட்டாதி 13 ந் திகதி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகத்துடன் தாம் இப்போது திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் தெரியப்படுத்தி இக்கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். வெற்றுப்பத்திரங்கள் பெறுவதற்குமுன் கேள்விக்கட்டணமாக ரூபா 50.00 முதலாவது வேலைக்கும், ரூபா 25.00 இரண்டாவது வேலைக்கும் ஏதாவது ஓர் கச்சேரியில் அல்லது கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளும் நீர்ப்பாசனக் கந்தோரில் செலுத்திப் பெற்ற பற்றுச் சீட்டை சமர்ப்பிக்க வேண்டும். கேள்விக்கட்டணம் கிராம அபிவிருத்திச் சபைகள், கூட்டுறவுச் சங்கங்கள் செலுத்தத் தேவையில்லை.

மேலதிக விபரங்கள் எல்லாவற்றையும் மாத்தளை நீர்ப்பாசனக் கந்தோரில் தெரிந்து கொள்ளலாம்.

எஸ். சோமசுந்தரம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
மாத்தளை.

8–893—27.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,490

---

## வித்தியா பகுதி

கீழ்க்காணும் வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் 1965 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 21 ந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிவரை வவுனியா கல்விக்கந்தோர் கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| பாடசாலைப் பெயர் | வேலை விபரம் |
|---|---|
| 1. வ/முள்ளியவளை அ.த.க.பா. | சேதமுற்ற பாடசாலைக் கட்டடத்தைத் திருப்பிக் கட்டுதல். |
| 2. வ/வெள்ளாமுள்ளிவாய்க்கால் அ.த.க.பா. | சேதமுற்ற பாடசாலைக் கட்டடத்தைத் திருப்பிக் கட்டுதல். |

மாவட்டக் குறியீடு

| | |
|---|---|
| வ/ | வவுனியா மாவட்டம். |
| குறிப்பு. | பதிவுத் தகைமை. |
| வித்தியாபகுதி | அங்கீகரிககப்பட்ட சங்கம். |

| | ரூபா. | ரூபா |
|---|---|---|
| இல. 1. | 15,000/- அல்லது அதற்கு மேல் | 15,000 அல்லது அதற்கு மேல் |
| 2. | 6,000/- அல்லது அதற்கு மேல். | 6,000 அல்லது அதற்கு மேல் |

2. இவ்வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் குறிப்பில் கொடுக்கப்பட்ட தொகைக்கு வித்தியா பகுதியில் பதியப்பட்டவர்களுக்கு 1965 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 20 ந் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிவரை வவுனியா கல்வி அதிகாரி அவர்களால் வழங்கபபடும் இவ்வேலைக்கு ரூபா. 100/- கொழும்பு வித்தியாதிபதி கந்தோரிலோ அல்லது வெளியூரிலாகில் அப்பகுதிக் கச்சேரியிலோ கட்டியதாகப் பற்றுச்சீட்டு வவுனியா கல்வி அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும். காசோலை, மணியோடர், போஸ்ரலோடர் முதலியன ஏற்றுக்கொள்ளப் படமாட்டா. கேள்விப்பத்திரங்களுக்கான காசு கட்டுவதற்குரிய பத்திரங்கள் கொழும்பு வித்தியா கந்தோர் (எஸ்.டபிள்யூ) கிளையிலோ அல்லது வவுன்யா விததியாதிகாரியிடமோ பெறவேண்டும். குறிப்பில் காண்பிககப்பட்டபடி பதியப்பட்டதாக அத்தாட்சி காண்பிப்பவர்களுக்கு மாத்திரமே பணமிடும் பத்திரங்கள் வழங்கப்படும்.

3. நீர்ப்பாசன, பொதுவேலைப்பகுதி, வித்தியாபகுதியில் குறிப்பில் கொடுக்கப்பட்ட தொகைக்கு பதியபபட்ட அங்கீகரிக்கபபட்ட சங்கங்கள் இவவேலைகளுக்கு விண்ணபபிக்க முடியும். அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் வேலைவிபர மதிப்புப் பத்திரங்களை நிரப்பவேண்டிய அவசியமில்லை. இச்சங்கஙகள் வித்தியாபகுதி மதிபபீட்டின் பிரகாரம் வீதம், தொகை, அளவு ஆதியவறறுக்கமைய வேலைகளை ஏற்றுச்செய்யும் சம்மதத்தை கேளவிச் சபைககு அறிவித்தல போதுமானது. அங்கீகரிக்கபபட்ட சஙகஙகளுககு விசேட கேள்விப்பத்திரபபடிவங்கள் வழங்கப்படும். அப்படிவங்களிலேயே அச்சங்கங்கள் விண்ணப்பிக்கவேண்டும். அங்கீகரிக்கப்பட்ட சஙகங்கள் கேள்விப்பத்திர இடுபணம் செலுத்துவதிலிருந்து விலககப்படுவர். அவர்களுக்கு விசேட கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படுமுன் குறிப்பில் குறிப்பிட்ட தொகைகளுக்குப பதியப்பட்டதாக அத்தாட்சி காண்பித்துக் கேள்விப்பத்திரப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

4. 2 ம் 3 ம் பந்தியில் குறிப்பிட்டபடி வவுனியா கல்வி அதிகாரியிடமிருந்து பெறக்கூடிய கேள்விப்பத்திரங்கள் இரட்டைப் பிரதிகளில் வவுனியா கலவி அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அக் கந்தோரிலிருந்து வேண்டிய மாதிரிப் படம் பிற விபரங்கள் அறியலாம். கேளவிப் பததிரங்கள் பதிவு செய்த தபால் மூலம் தலைவர் கேள்விச் சபை, விததியா கந்தோர் வவுன்யா என்று விலாசமிட்டு அனுப்ப வேணடும். உள்ளூர் விண்ணப்பகாரர்கள் கேள்விப் பத்திரங்கள் தபால் மூலம் அனுப்ப விரும்பாவிடின், விண்ணப்பகாரரோ அல்லது அவரின் பிரதிநிதியோ தமது கேளவிப் பத்திரஙகளை அடையாள முத்திரையிட்டு விததியாதிகாரியின கந்தோரிலுள்ள காரியாலய உதவியாளரிடம் கொடுத்துப பற்றுச் சீட்டுப் பெற்றுக் கொள்ளல்வேண்டும். மேலுறையில் விண்ணபபகாரரின பெயர், விலாசம் முதலியன குறிப்பிடவேண்டும்.

5. 1965 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 21 ந் திகதி செவ்வாய்க்கிழமை முறபகல் 10.30 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் வவுனியா வித்தியா கந்தோரில் திறக்கப்படும. அப்பொழுது விண்ணப்பகாரர்கள் பிரசன்னமாயிருக்கலாம். அவர்களுக்குக் கேளவிப்பத்திரத்தைச் சமர்ப்பித்தவர்களின பெயர்களும் விகித விபரங்களும் வாசித்துக் காண்பிககப்படும்.

6. கேள்விப்பத்திரங்களைப் பெறும் திகதி முடிவடைந்த பின் ஆறு வார காலத்திறகுத் தமது கேள்வியை அமுலில வைக்க வேண்டுமென்று கேள்விப்பததிரம சமர்ப்பிப்போர் வேண்டப்படுவர்.

7. பரிசீலனைக்கென கேள்விப்பத்திரஙகள் கிடைக்கக்கூடியதாகவிருக்கும வவுன்யா வித்தியா கந்தோரிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

8. கூரைகளுக்கு ஓடுகள் பாவிக்கவேண்டிய கட்டடங்களில் உள்ளூரில் தயாரிககபபட்ட ஓடுகளே பாவிக்க வேண்டும். ஓடுகளின் தன்மையை ஆராயவேண்டிய அவசியமேற்படுமிடத்து விநியோகிப்போரின் செலவில் இலங்கை விஞ்ஞான ஆராய்ச்சிக கூடததில் செய்து கொள்ளலாம்.

செ. அ. ஞானசேகரம்,
வித்தியாதிகாரி வவுனியா.

வித்தியா கந்தோர்,
வவுனியா.
1965 ம் ஆண்டு ஒகஸ்ற் மீ 21 ந் உ.

8–955—27.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,490

## நீர்ப்பாசன இலாகா

கீழ்க்காணும் வேலைகட்குக் கேள்விப்பத்திரங்கள் குருநாக்கலிலுள்ள வடமேற் பகுதி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1965 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அதன்பின்னர் உடனே திறக்கப்படும்.

| வேலைகளின் விபரம் | ஒப்பந்தக்காரர் பதிவுசெய்யப் படடிருக்கவேண்டிய தொகை | | கேள்விக் கட்டணத் தொகை |
|---|---|---|---|
| | ரூபா | | ரூபா |
| (1) தப்போவாத் திட்டத்திலுள்ள இவ்விலாகா வீதிகளையும் 1 ம் கட்டை "சேக்குலர்" வீதிகளையும் திருத்துதல் | 22,000 | .. | 25 |
| (2) தப்போவாத் திட்டத்திலுள்ள இவ்விலாகா வீதிகளையும் 2 ம் கட்டை "சக்குலர்" வீதிகளையும் திருத்துதல் | 22,000 | .. | 25 |
| (3) தப்போவாத் திட்டத்திலுள்ள இவ்விலாகா வீதிகளையும் 3 ம் கட்டை "சேக்குலர்" வீதிகளையும் திருத்துதல் | 22,000 | .. | 25 |

ஒவ்வொரு வேலைக்கும் நேரே கொடுக்கப்பட்டுள்ள தொகைக்கும் அதற்குமேலுள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் மட்டுமே கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

இக்கேள்விக்குரிய வெற்றுப் பத்திரங்கள் புத்தளத்திலுள்ள நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1965 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 9 ந் திகதி வியாழக்கிழமை வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப்புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கவேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா வென்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயன்படும். ஒவ்வொரு வேலைக்கும் நேரே காட்டப்பட்டுள்ள கேள்விக் கட்டணத் தொகையை வெற்றுப்பத்திரங்கள் வழங்குமுன்னர் சமர்ப்பிக்க வேண்டும். அல்லது இக்கேள்விக் கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டு காட்டினாலும் போதுமானது.

இக்கேள்விக்குரிய மேலதிக விபரங்கள் யாவற்றையும் அதே நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

புத்தளம்,
1965 ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 18 ந் வ.

எம். எம். சிவப்பிரகாசம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர், உப-பிரிவு, புத்தளம்.

8-935—27.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,490

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### புத்தளம் நீர்ப்பாசன உப-பிரிவு

புத்தளம் உப-பிரிவின் கீழ் பொருட்கள் (1965/66) ஆண்டுகட்கு ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு கொண்டு செல்வதற்கு (ஏற்றுவது இறக்குவது உடன்) கேள்விப்பத்திரங்கள் குருநாக்கலிலுள்ள வட மேற்பகுதி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1965 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14 ம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 10 மணி வரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும். அதன் பின்னர் உடனே திறக்கப்படும்.

10,000/- ரூபாவும் அதற்கு மேலும் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர் மட்டுமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

இக் கேள்விக்குரிய வெற்றுப் பத்திரங்கள் வட மேற்பகுதி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரின் கீழுள்ள எந்த நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்திலும் அலுவலக நேரங்களில் 1965 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10 ம் திகதி மத்தியானம் 12 மணி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வியாளர்களாக முன்வருவோர் கேள்விப் பதிவுப் புத்தகங்களுடன் தற்பொழுது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும், அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். வெற்றுப்பத்திரங்களை வழங்குமுன்னர் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் கேள்விக் கட்டணத்தின் தொகை 25/- ரூபாவைக் கேள்விப் பத்திரங்களுக்குச் செலுத்த வேண்டும். இக் கேள்விக் கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டுக்களைக் காட்டினாலும் போதுமானது.

இக் கேள்வியைப்பற்றிய மேலதிகமான விபரங்கள் யாவற்றையும், புத்தளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

எம். எம். சிவப்பிரகாசம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
புத்தளம் உப-பிரிவு.

புத்தளம்,
1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 16 ந் வ.

8-944—27.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,490

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### கண்டி உப-பிரிவு

1965-66 ம் ஆண்டிற்கு கண்டி உப-பிரிவு பண்டகசாலையிலிருந்து சாமான்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்தலுக்காக்கிய கேள்விப்பத்திரங்கள். கண்டியிலுள்ள மத்திய பகுதி நீர்ப்பாசன பொறியியலாளரினால் 1965 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 22 ம் திகதி காலை 10 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும் அதன்பின் உடனேதிறந்து பார்க்கப்படும்.

2. நீர்ப்பாசன திணைக்களத்தில் ரூபா 20,000.00 க்கும் அதற்கு மேலும் பதிவுசெய்த ஒப்பந்தக்காரர்கள் மாத்திரம் இக்கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்க தகுதியுடையார் ஆவர்.

3. இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் கண்டி, மாத்தளை, கேகாலை, மினிப்பே, நுவரெலியா ஆகிய இடங்களிலுள்ள உபபிரிவு நீர்ப்பாசன அலுவலகங்களில் அலுவலக நேரங்களில் 1965 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 1 ம் திகதி தொடக்கம் 1965 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 20 ம் திகதி வரைக்கும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தங்களுடன் தாம் இதன் திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஒரு பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா என்றறிய நீர்ப்பாசன உத்தியோகத்தருக்குப் பயன்படும். வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசன பொறுப்பாளரின் அலுவலகத்தில் ரூபா 25 கேள்விக் கட்டணமாக செலுத்தப்படவேண்டும். இக்கேள்விக்கட்டணத்தை ஒரு கச்சேரியில் செலுத்து பற்றுச்சீட்டு காட்டினாலும் போதுமானது.

4. விண்ணப்பிக்கும் ஒப்பந்தக்காரர்கள் குறைந்தது இரண்டு "லொறி" கள் தன்னுடமையாக வைத்திருப்பவர்களுக்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். ஒப்பந்தக்காரர்கள் தன்னுடமையாக லொறிகள் வாங்கிய தன்னுடமைப் பத்திரத்தையும், பதிவுப் பத்திரத்தையும் கேள்விப் பத்திரங்கள் பெறுமுன் உபபிரிவு நீர்ப்பாசன பொறுப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

5. இக்கேள்வி யைப் பற்றிய மேலதிகவிபரங்களை அதே நீர்ப்பாசன அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ட. பெ. பாத்தலோ,
நீர்ப்பாசனப் பொறுப்பாளர்,
கண்டி உப-பிரிவு.

நீர்ப்பாசனக் கந்தோர்.
கண்டி, 1965 ம் ஆண்டு ஓகஸ்து மீ 17 ந் வ.

8-1011—27.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,490

## சந்தைப் படுத்தற் பகுதி

1965.10.1 ம் திகதி முதல் 1966.9.30 ம் திகதிவரை இதன்கீழ் விபரிக்கப்படும் காய்கறி பழவர்க்கங்கள் முதலியன ஏற்றிச் செல்லும் சேவைகளுக்குரிய ரெண்டர் முடிவு 1965 செத்தெம்பர் 21 ம் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப. 2.30 மணியாகும்.

(1) சந்தைப் படுத்தல் பகுதியின் பிபிலே, மொனராகலே, புத்தளை ஆகிய இடங்களிலுள்ள காய்கறி பாசல் பண்ணும் தாபனங்களிலிருந்தும் வடல்கும்புரா, வெள்ளவாயா ஆகிய இடங்களிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சேகரிப்பு நிலையங்களிலிருந்தும் காயகறி, பழவர்க்கங்கள் மருதானையில் உள்ள திரிபபொலிச் சந்தைக்கு ஏற்றிச் செல்லுதல்.

(2) கொழும்பு கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்திலிருந்தும், நாரம்பிட்டியில் உள்ள சந்தைப் படுத்தல் பகுதியின டின் உணவுகளைத் தாபனத்திலிருந்தும் திரிபபோலிச் சந்தையில உளள, பலசரக்கு பண்டசாலையிலிருநதும் டின் உணவும் சரகு வகைகளும் சந்தைப் படுத்தல் பகுதியின் மொனராகலேயிலுள்ள கடைகளுக்கு ஏறறிச செலலுதல.

(3) சந்தைப் படுத்தல பகுதியின் திசமாருமை, தங்காலே ஆகிய இடங்களிலுளள காய்கறி, பாசல பணணும் நிலையங்களிலிருந்து காய்கறி பழவர்க்கஙகள, தேங்காய்கள், கருப்பட்டி, பாணி முதலியன காலி, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களிலுளள சநதைப படுத்தல் பகுதி கடைகளுக்கும, மருதானை திரிபபொலிச சந்தைக்கும் நாரமபிட்டி பழம பானம் தயாரிக்கும் ஆலைக்கும் ஏறறிச செலலுதல்.

(4) சந்தைப் படுத்தல் பகுதி தங்காலையில் உள்ள நிலையத்திலிருந்து மாததறை, காலி, பாணநதுறை, மொறட்டுவை ஆகிய இடங்களுளள கடைகளுக்கும் கொழும்பு திருப்பொலிச் சந்தைக்கும தயிர், வாழைபபழும் ஆகியன ஏற்றிச செலுதல்.

(5) சந்தைப் படுத்தல் பகுதியின் புத்தளத்திலுள்ள காய்கறி பாசல் பண்ணும் நிலையத்திலிருந்து காய்கறி, பழவர்க்கங்கள், முட்டை முதலியன கொழும்பு திருப்பொலிச் சந்தைக்கு ஏற்றிச் செல்லுதல்.

(6) சந்தைப் படுத்தல் பகுதியின் புத்தளத்திலுள்ள தாபனத்திலிருந்து புத்தளம் சிவில் ஆசுபபத்திரிககும், கயரோக ஆசுப்பத்திரிக்கும் புத்தளம் கூட்டுறவு பண்டசாலை யூனியனிலிருந்து புத்தளம் சநதைப படுத்தல் பகுதி நிலையத்திறகும் அங்கிருந்து புத்தளம் புகையிரத நிலையத்திற்கும் குருணுகலை ரோட்டில் உள்ள எஸ். ஈ. எம். அசென் கூடுஸ் என்ற விலாசத்திற்கும் காய்கறி, பழவர்க்கங்கள் சரகு, வகைகள், அரிசி, முட்டை முதலியன ஏற்றிச் செல்லுதல்.

(7) சந்தைப் படுத்தல் பகுதியின மாத்தளையில் உள்ள காய்கறி பாசல் பண்ணும் நிலையத்திலிருந்து காய்கறி பழவர்க்கங்கள் முதலியன, கொழும்பு திரிபபொலிச் சந்தைககு ஏற்றிச் செல்லுதல்.

(8) காங்கேசன்துறை புகையிரத நிலயத்திலிருந்து சந்தைப் படுத்தல் பகுதியின காங்கேசன்துறை ஆசுபபத்திரி விநியோகப பிரிவிற்கும் அங்கிருநது காஙகேசனதுறை அரசினர் ஆசுபபதகிரிகளுக்கும், தெல்லிப்பளை கூட்டுறவு தாபனததிலிருநதும் காஙகேசன்துறை விறகு காலையிலிருந்தும காஙகேசனதுறை ஆசுபபத்திரி விநியோகப பிரிவுககு காயகறி, சரக்கு வகைகள, அரிசி, விறகு முதலியன ஏறறிச் செலுதல.

2. கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 1, சதாம் வீதி, இல. 62 ல் உள்ள சநதைப் படுத்தல பகுதி பிரதம கந்தோரில 1965.9.21 ம் திகதி செவவாய்க்கிழமை நணபகல 12 மணி வரையும ரூபா 100/– கட்டுபபணம் செலுத்திய பற்றுசசீட்டு காண்பித்துப பெறறுக கொளளலாம்.

8–926—27.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,490

---

## சந்தைப் படுத்தற் பகுதி

சந்தைப் படுத்தல் பகுதியின் மருதானை, மக்கலம் வீதியில் இருககும்போககுவரத்துக் கிளைத் தாபனத்தில் உள்ள பாவிக்கப்பட்ட மோட்டார் வாகன உறுபபுகள் வாங்கி அபபுறபபடுத்துவதறகுரிய ரெணடர முடிவு 1965 செபடெம்பர் 17 ம திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2.30 மணியாகும. ரெணடர் பததிரஙகள ரூபா 100/– கட்டுபபணம் செலுத்திக் கொழும்பு 1, இல. 62, சதாம் வீதியிலுள்ள சநதைப் படுத்தல் பகுதியில 1965.9.17 ம திகதி நணபகல 12 மணி வரையும பெறறுக கொள்ளலாம.

8–920—27.8 65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,490

---

## 1965/66 ம் வருடத்தின் வெலிகாமம் உணவுக் களஞ்சியத்திற்கு உணவுப் பொருட்களைக் கொண்டு செலவதற்கும ஏறறுமதி இறக்குமதி செய்வதறகுமான கேள்விப் பத்திரம்

வெலிகாமம் புகையிரத நிலையத்திலிருந்து வெலிகாம உணவுக் களஞ்சியத்திற்கு உணவுப பொருடகளைக் கொண்டு செல்வதறகும், ஏற்றுமதி இறககுமதி செயவதறகுமான கேள்விப்பத்திரங்களை மாததறை பிரதி உணவுக கட்டுப்பாட்டு அதிகாரியால 1965 ம ஆணடு செபடம்பர் மாதம் 13 ம திகதி பி.ப. 2.30 மணி வரை ஏறறுக் கொள்ளப்படும்.

2. இக்கேளவிக்கான வெற்றுப் பததிரஙகளை மாத்தறை பிரதி கட்டுபபாட்டு அதிகாரியின கநதோரிலிருநது பெறறுககொளளலாம். விணணப்பக்காரர்கள் கேளவிபபத்திர இரண்டு பிரதிகள சமர்ப்பிக்க வேண்டும். இபபத்திரஙகள 1965 ம ஆண்டு செபடம்பர் மாதம் 13 ம் திகதி பகல 12 மணிககுப பின் கொடுக்கபபடமாட்டா.

3. கேள்விப்பத்திரம் பெறுவதற்கு முன் ரூபா 250 கொண்ட முதலை மாத்தறைக் கச்சேரியில் கட்டி பறறுசசீட்டு சமாப்பிககபபடல் வேணடும். பதிவு செய்யபபட்ட சஙகஙகள கேளவிப பததிரத்திறகான கட்டணம் செலுததுவதில் இருந்து தவிாககபபட்டுளளனர்.

4. மேலதிக விபரஙகளை மாத்தறை பிரதி உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரியின கநதோரிலிருநது பெறறுககொள்ளலாம்.

வீ. அபேரா,
மாத்தறை பிரதி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிக்காக.

மாத்தறைக் கச்சேரி,
1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 17 ந் வ.

8–896—27.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,490

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## உபயோகமற்ற பொருட்களின் பிரசித்த ஏல விற்பனை

1965 ம் ஆண்டு செபறெம்பர் மாதம் 14 ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் இரத்மலானை அத்திரியா வீதியிலுள்ள உதவி வானொலி இஞ்சினியர் காரியலயத்தில் உபயோகமறற சில பொருட்கள் ஏலத்தில விற்கப்படும்.

விற்பனைத்தினத்தன்று காலை 9 மணிதொடக்கம் விற்பனைக்குரிய பொருட்களை பார்வையிடலாம். விற்பனைககுரிய பொருட்களின விபரம் அடஙகிய பட்டியலகளை கொழுமபு லோட்டஸ் வீதியிலுளள சிவில விமான போககுவரதது அதிபரிடமிருநது விணணபபததின்மூலம் பெறறுககொள்ளலாம.

விற்பனையில் வாங்கப்பட்ட பொருட்களுக்குரிய தொகையைக் காசாக அவ்விடத்திலேயே கொடுபபதுடன வாஙகபபட்ட பொருட்களை வாங்கிய அதே நாள் மாலை 4.30 மணிக்கு முன்னரே அப்புறப்படுத்தல்வேண்டும்.

டபிள்யு. எல். பீ. த மெல்,
சிவில் விமானபபோககுவரத்து அதிபர்.

கொழும்பு 1,
1965 ம் ஆண்டு ஆகஸ்டு மீ 16 ந் வ.

8–853—27.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,490

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இலங்கை வாழைச்சேனை ஈஸ்டேர்ண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.